

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.3.2025) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறை சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள 8 தொகுதிகள் கொண்ட கட்டுமானப் பணிகளுக்கான தரவு விவரப் புத்தகங்களை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் மரு.ஆர். செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டத்தின் வரைமுறைகளை மீறி செயல்பட்ட

# நகர்மன்றத் தலைவர் உள்ளிட்ட 4 பேர் தகுதி நீக்கம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, மார்ச் 29 -

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டத்தின் வரைமுறைகளை மீறி செயல்பட்டதாக 4 (நான்கு) கவுன்சிலர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

அந்த நால்வரில் ஒருவர் நகர் மன்றத் தலைவர், இன்னொருவர் மண்டலக் குழுத் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து தமிழக அரசின் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை முதன்மைச் செயலாளர் விடுத்துள்ள பத்திரிகைச் செய்தி வருமாறு:-

நமது மாநிலத்தின் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், அதாவது, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவை 1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்றன.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகம் தொடர்பான 1998-ஆம் ஆண்டு சட்டத்தின் வகைமுறைகளை மீறும் வகையில் செயல்படும் மேயர்கள், துணை மேயர்கள், மன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள அச்சட்டம் அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.

இந்நிலையில், 1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் வகைமுறைகளை மீறி செயல்பட்ட நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்வரும் 4 பிரதிநிதிகள் மீது அரசு, அச்சட்டத்தின் பிரிவு 52ன் கீழ் உரிய நடைமுறைகளை பின்பற்றி நடவடிக்கை மேற்கொண்டு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் அவரவர் வகித்துவந்த பதவியிலிருந்து நீக்கம் செய்து ஆணையிட்டுள்ளது.

(1) வ.பாபு, 189வது வார்டு உறுப்பினர், பெருநகர சென்னை மாநகராட்சி.

(2) கே.பி.சொக்கலிங்கம், 5வது வார்டு உறுப்பினர், பெருநகர சென்னை மாநகராட்சி.

(3) ச.ஜெயபிரதீப், 40வது வார்டு உறுப்பினர் மற்றும் 3வது மண்டலக்குழுத் தலைவர், தாம்பரம் மாநகராட்சி.

(4) திருமதி.க.சகுந்தலா, 11வது வார்டு உறுப்பினர் மற்றும் உசிலம்பட்டி நகர்மன்ற தலைவர்.

இவ்வாறு அரசு முதன்மைச் செயலாளர், (நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை) தெரிவித்துள்ளார்.

### பி.எம்.ஸ்ரீ திட்டத்தை செயல்படுத்தாத மாநிலங்களுக்கு

# நிதியை நிறுத்துவது நியாயமில்லை!

## நாடாளுமன்ற நிலைக்குழு கண்டனம்!

புதுடெல்லி, மார்ச் 29 -

புதிய தேசிய கல்விக் கொள்கையை ஒன்றிய அரசு அமல்படுத்தியுள்ளது. இந்த திட்டம் தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கைக்கு எதிரானது என்பதால் புதிய தேசிய கல்விக் கொள்கையின் கீழ் பி.எம்.ஸ்ரீ திட்டத்தை செயல் படுத்த தமிழ்நாடு அரசு மறுத்து வருகிறது. இதனால் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய ரூ.2,152 கோடியை ஒன்றிய அரசு நிறுத்திவைத்துள்ளது.

இதேபோல், பி.எம்.ஸ்ரீ திட்டத்தை ஏற்காத கேரள மாநிலத்துக்கு ரூ. 859 கோடியையும், மேற்கு வங்காள மாநிலத்துக்கு ரூ.1,000 கோடியையும் ஒன்றிய அரசு நிறுத்தி வைத்துள்ளது. இதனை எதிர்த்து தமிழ்நாடு அரசு கடுமையாக போராடி வருகிறது.

இந்த நிலையில் காங்கிரஸ் எம்.பி. திக்விஜய் சிங் தலைமையிலான கல்வி, பெண்கள், குழந்தைகள், இளைஞர் மற்றும் விளையாட்டுக்கான நாடாளுமன்ற நிலைக்குழு, வி.எம்.ஸ்ரீ பள்ளித் திட்டத்தை செயல்படுத்த ஒப்புக் கொள்ளாத மாநிலங்களுக்கு நிதியை நிறுத்திவைப்பது என்பது நியாயமானது அல்ல. இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

மேலும், சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுடன் இணைக்கமாகப் பேசி இந்தப் பிரச்சினையைத் தீர்த்து நிலுவையில் உள்ள நிதியை முன்னுரிமை அடிப்படையில் விடுவிக்க வேண்டும் என்றும் அரசுக்கு அந்த குழு பரிந்துரைத் துள்ளது.

### தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்திற்கு நிதி வழங்காத – ஒன்றிய

# பா.ஜ.க. அரசைக் கண்டித்து - திருவாரூர் மாவட்டத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் வேண்டுகோள்!

*திருவாரூர், மார்ச் 29 -*

*தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசினை கண்டித்து , தலைமைக்கழக அறிவிப்பின்படி திருவாரூர் மாவட்டத்தின் கழக ஒன்றிய பகுதிகளில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டங்களில் பெருந்திரளானோர் பங்கேற்கும்படி மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ.அறிக்கை வெளியிட்டுள்ளார்.*

*அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளதாவது.*



*கழக தலைவர் ,திராவிட நாயகர் தமிழ்நாடு முதலவர் தளபதி அவர்களின் வழி காட்டுதல் களோடு தலைமைக்கழக அறிவிப்பின்படி, மகாத்மா காந்தி தேசிய ஊராக வேலை உறுதி திட்டத்தின் [MGNREGA] கீழ் தமிழ்நாட்டிற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு வழங்க வேண்டிய ரூ.4043 கோடி நிதியை வழங்காமல், தொடர்ந்து தமிழ் நாட்டை வஞ்சிக்கும் அராஜக ஒன்றிய அரசி கண்டித்து, இன்று (29.03.2025-சனிக்கிழமை) காலை 09.00மணியளவில் நமது திருவாரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கழக ஒன்றியங்களிலும் தலா இரண்டு இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.*

*அந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கிளைக் கழக, வார்டு கழக நிர்வாகிகள், மாணவரணி, இளைஞரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி உள்ளிட்ட அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் 100 நாள்வேலை வாய்ப்பு திட்டத்தில் பயன்பெறும் பெண்கள் அனைவரும் தவறாது பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ.தமது அறிக்கையில் கூறியுள்ளார்.*



திருப்பூர் மாவட்டம், முத்தூர் பேரூராட்சி, சின்ன முத்தூரில் நீர்வளத்துறையின் சார்பில் ஆத்துப்பாளையம் நீர்த்தேக்கத் திட்டத்தின் தலைப்பு ஒழுங்காக்கி மற்றும் ஊட்டுக் கால்வாய் ரூ 2.30 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் என்.ஆர்.இளங்கோ, கோ.மலர்விழி, நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் சதீஸ்குமார், ராசி கே.ஆர்.முத்துக்குமார், எஸ்.சந்திரசேகரன், சபரி எஸ்.முருகானந்தம், செண்பகம் பாலு, எம்.எஸ்.மோகனசெல்வம், மு.க.அப்பு, பௌத்தியப்பன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# மாவட்டச் செயலாளர்கள் - கழக நிர்வாகிகள் கவனத்திற்கு

கடந்த நான்கரை மாதங்களாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட (MGNREGA) நிதி ரூ.4034 கோடியை தமிழ்நாட்டிற்கு வழங்காமல் - தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்துவரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து **கழகத்தலைவர்** அவர்களின் அறிவுரைக்கிணங்க தி.மு.க. சார்பில் 29.3.2025 சனிக்கிழமை அன்று காலை அனைத்து கழக ஒன்றியங்களிலும் தலா இரண்டு அனுமதிக்கப்பட்ட இடங்களில் 100 நாள் வேலைவாய்ப்பால் பயன்பெறுவோரைத் திரட்டி நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் எழுப்புவதற்கான முழக்கங்கள். (மூன்று முறை எழுப்பவும்)

- **வஞ்சிக்காதே வஞ்சிக்காதே**
  **தமிழ்நாட்டை வஞ்சிக்காதே!**
- **அடிக்காதே அடிக்காதே**
  **ஏழைகள் வயிற்றில் அடிக்காதே!**
- **சம்பள காசை திருடாதே**
  **ஏழைகள் வயிற்றில் அடிக்காதே!**
- **மோடி... மோடி**
  **என்னாச்சு எங்க பணம் 4000 கோடி?**
- **சம்பளம் கொடு**
  **சம்பளம் கொடு...**
  **100 நாள் வேலைக்கான சம்பளம் கொடு.**
- **பாஜக அரசே பதில் சொல். .**
  **100 நாள் சம்பள பணம் வருமான்னு பதில் சொல்!**
- **மாசம் 1000 கொடுக்கிறாரு ஸ்டாலினு**
  **எங்க சம்பளத்தை கூட புடுங்குறாரு மோடி!**
- **உழைக்கும் மக்களை சுரண்டாதே**
  **எங்கள் பணத்தை நிறுத்தாதே!**
- **உழைக்கும் மக்களை ஏய்க்காதே**
  **ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே!**
- **எப்ப வரும் எப்ப வரும் மோடியே**
  **எங்க சம்பளம் எப்ப வரும்?**
- **பதில் சொல் பதில் சொல்**
  **மோடி அரசே பதில் சொல்!**
- **வக்கில்லையா வக்கில்லையா**
  **எங்கள் சம்பளத்தைத் தர**
  **மோடிக்கு வக்கில்லையா**
- **துன்புறுத்தாதே துன்புறுத்தாதே**
  **ஏழை மக்களை துன்புறுத்தாதே**
- **கொடுத்துவிடு கொடுத்துவிடு,மோடியே**
  **எங்கள் ஊதியத்தை கொடுத்து விடு.**
- **பணக்கார முதலாளிக்கு வரித்தள்ளுபடி**
  **ஏழை மக்களுக்கு சம்பளப்பிடிப்பா?**
- **மோடியே மோடியே!**
  **அடிமைகளின் டாடியே**
  **உழைக்கும் மக்களை ஏய்க்காதே!**

## பின்வரும் உறுதிமொழியையும் ஏற்க வேண்டும்:

- **தமிழ்நாட்டின் நலன்களையும் எதிர்காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம்**
- **தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம்.**
- **தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும்!**

★★★